# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 183/2017 | அரசு தரப்பு | அ.சா.4 |
| பெயர் | செல்வகுமார் | வயது | |
| கணவர்/தகப்பனார் பெயர் | கோவிந்தசாமி | முகவரி | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 2nd day of July 2025.

(எதிரி நீதிமன்றத்தில் இன்று ஆஜர்)

முதல் விசாரணை

நான் நீலிக்கோணாம்பாளையம், அண்ணா நகரில் வசித்து வருகிறேன். எலெக்ட்ரிக்கல் காண்ட்ராக்டராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன ராஜு எனக்கு ஒன்றுவிட்ட தாய்மாமன் ஆகும். அவருக்கு சரண்யா, சத்தியா என்ற இரண்டு பெண் மக்கள் இருக்கிறார்கள். 08-11-2009 அன்று சரண்யா எனக்கு போன் செய்து அப்பாவை காணவில்லை என்று கூறினார். நான் சரண்யாவை விசாரிக்க அவர்கள் வீட்டில் குடியிருக்கும் வனஜா ராஜுவை காணவில்லை என்று சரண்யாவிற்கு கூறியுள்ளார். அதன் அடிப்படையில் சரண்யா அதை என்னிடம் தெரிவித்தார். அதனால் நான் அவர்களோடு அவரை தேடிப் பார்த்தோம். அவர் கிடைக்காத காரணத்தினால் மறுநாள் பி.5 சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். பின்னர் சிறிது நாள் கழித்து ராஜுவை சொத்திற்காக யாரோ கொலை செய்து எரித்து விட்டதாக தெரிந்து கொண்டேன். இது சம்மந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னுடைய தொழிலுக்கு செல்போன் ஒரு முக்கிய அங்கம் ஆகும். இறந்துபோன ராஜுவிற்கு சுமாராக 61 வயது இருக்கலாம். எனது தொலைபேசி எண். 9965548629 ஆகும். இந்த எண்ணை நான் 20 வருடங்களாக பயன்படுத்தி வருகிறேன். முதலில் அந்த எண் ஏர்செல்லாக இருந்தது. இப்பொழுது ஏர்டெல்லா உள்ளது. இந்த வழக்கு சம்மந்தமாக நான் ஏற்கனவே அமர்வு வழக்கு எண்.51/2012 என்ற வழக்கில் இதே நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன். அந்த வழக்கில் நான் சுமார் 8 அல்லது 9 மாதங்கள் கழித்து அவர் இறந்து விட்டதாக சொன்னார்கள் என்று நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சாட்சியத்தில் சொத்திற்காக ராஜுவை யாரோ கொலை செய்து விட்டார்கள் என்று நான் கூறவில்லை என்றால், சரிதான். செல்போன் மூலமாகத்தான் சரண்யா என்னை அழைத்து தகவல் கொடுத்தார். 08-11-2009 அன்று புகார் கொடுத்தோம். புகாரில் சரண்யாதான் கையொப்பம் செய்தார். நான் கையொப்பம் செய்தேனா என்று எனக்கு நினைவில்லை. சொத்திற்காக ராஜுவை யாரோ கொலை செய்துள்ளார்கள் என்று தற்போது சொல்லிக் கொடுத்து வழக்கிற்காக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சரண்யா மற்றும் சத்தியாவிடம் உறவினர் என்ற முறையில் நான் தொடர்பில்தான் இருக்கிறேன். இந்த வழக்கைப் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்று சொன்னால்

சரியல்ல. போலீசார் எனக்கு சம்மன் கொடுத்ததன் அடிப்படையில்தான் நான் இன்று நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளிக்கிறேன்.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/செல்வகுமார்,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.